[1983 பிப்ரவரி 1]

மேச்சேரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம்,

*வினா எண் 82— திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கு மேட்டூர் துணை மின் நிலையத்திலிருந்து நேரிடையாக மின்சாரம் செல்லாமல் சுற்றுப்பாதை வழியாக நீண்ட தூரம் எடுத்துச் செல்லப்படுவதால் வோல்டேஜ் (Voltage) குறைந்து அதனால் விவசாய பம்ப் செட்டுகளின் காயில்கள் (Coils) தீய்ந்து போவதால் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மேச்சேரி ஊராட்சி ஒன்றிய பகுதியின் கடைகோடி பகுதியில் சீரான மின் அழுத்தம் போதிய அளவு இல்லையென்று அரசு அறியும், விவசாய பம்ப் செட்டுகளின் காயில்கள் தீய்ந்துபோனதாகத் தகவல் இல்லை.

(ஆ) 3.85 கி. மீ. தூரத்திற்கு இரண்டு 11 கிலோ வோல்ட் உயர் மின் அழுத்த தொடர் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக இப்பகுதியில் வழங்கப்படும் மின்சாரத்தின் வோல்டேஜ் தற்போது உயர்ந்துள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, நீண்ட நாட்களாக இருந்து வந்த இந்தப் பிரச்னையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு பரிகாரம் செய்து கொடுத்ததற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மேச்சேரி ஒன்றியப் பகுதிகளுக்கு மேட்டூர் 1.10 கே. வி.யிலிருந்துதான் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேட்டூரில் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன, அந்த தொழிற்சாலைகளுக்கும் 1.10 கே. வி. யிலிருந்து மேச்சேரி ஒன்றியப் பகுதிகளுக்கும் தேவையான மின்சாரத்தை அந்த மின் நிலையம் சப்ளை செய்ய முடிவதில்லை. ஆகவே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்ற நங்கவல்லி துணை மின் நிலையத்திலிருந்து மேச்சேரி பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகம் செய்வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது நல்ல யோசனை; கவனிக்கப்படும்.

அந்தியூர் வனச்சரகக் காடுகளிலுள்ள யானைகள்

*வினா எண் 86—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானி தாலுகா அந்தியூர் அருகே அரசுக்கு சொந்தமான காடுகளில் உள்ள யானைகளை கொன்று தந்தங்களை எடுப்பதாக அரசுக்கு 1981-ம்ஆண்டு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 2–2-1981–ல் வரட்டுப் பள்ளம் அணைக்கு அருகில் யானைத் தந்தங்களைக் கொண்டு வந்ததாக இருவர் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. 4–2–1981-ல் செல்லம்பாளையம் வீட்டில் ஆள்வார் சரகத்தில் சந்தேகத்திற்கிடமான இரண்டு நபர்களை கைது செய்து கோபிச் செட்டிப்பாளையம் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இதுபோன்ற குற்றங்கள் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்கும்படி இப்பகுதி சரக அலுவலர்கட்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது பழமொழி அந்தக் காலத்தில். இந்தக் காலத்தில் யானையைப் பாதுகாப்பது நமது கடமையாகிவிட்டது. யானையைத் தந்தங்களுக்காகக் கொல்லுபவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டம் எந்த அளவுக்கு அனுமதிக்கின்றதோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே கடலிலே மிகப் பெரிய பிராணியான நீர்த் திமிங்கலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சர்வதேச பாதுகாப்புக் கழகம் முடிவெடுத்து, ஜப்பானில் திமிங்கலத்தையே நம்பி உள்ள பெரிய தொழிற்சாலையையே மூடிவிட்டு, திமிங்கலத்தைப் பாதுகாக்கிறார்கள். எனவே நிலத்திலே பெரிய பிராணியான யானையைப் பாதுகாக்க சர்வதேச அளவில் ஏற்பாடு செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய மிருகங்கள் என்கிற அளவிலே மாத்திரம் அல்ல. எந்த மிருகங்களானாலும் அவை பாதுகாக்கப்படவேண்டும் என்று கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைகளைச் சுட்டு தந்தங்களை வெளி மாநிலங்களுக்குத் திருட்டுத்தனமாகக் கொண்டுபோய் விற்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்படி

விற்கின்றவர்களைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா? அப்படி விற்கின்றபோது போலீசுக்குத் தகவல் கொடுத்துப் பிடிக்க அரசாங்கம் முனவருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த யானைத் தந்தங்களை வேறு மாநிலங்களுக்குக் கொண்டுபோய் விற்கின்ற நேரத்தில் அவர்களைப் பிடிப்பதற்கு இப்போது மத்திய அரசின் அளவிலே எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் மாநில எல்லையோரங்களில் இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுகின்றபோது தகவல் வருகின்ற நேரத்தில், கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குமன்றத்திலே தண்டனைக்காக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யானைகளைச் சுடுவது ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அறிகிறோம். அதேபோல வாங்குவதும் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் என்பதையும் அறிகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தகவல் வந்திருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தந்தத்தை அதிகமான விலை கொடுத்து வாங்குவதால் இப்படிப்பட்ட திருட்டு நடைபெறுகிறது என்பதை அரசு அறியுமா? ஆகையினாலே இதைக்கட்டுப்படுத்துவதற்காக வாங்கக் கூடியவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டத்தின்படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து வழங்கப்படலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் வைத்திருப்பவர்களுக்கு அல்லது வாங்குபவர்களுக்கு திருட்டுச் சொத்துக்களை வாங்கினால் எந்த தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்களோ அந்த விதி இதற்கும் செல்லுபடியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை தக்க நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வழிகாட்டிகள்

*வினா எண். 87—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எந்தெந்த மாவட்டங்களில் சுற்றுலா வழிகாட்டிகள் (guides) இருக்கிறார்கள்?

(ஆ) எல்லா மாவட்டங்களிலும் வழிகாட்டிகளை நியமிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?